## 6th Social Science Lesson 19 Questions in Tamil - புவியியல்

## 2. நிலப்பரப்பும் பெருங்கடல்களும்

1. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.(நிலத்தோற்றத்தின் வகைகள்)
1. முதல் நிலை – கண்டங்கள், பெருங்கடல்கள்
2. இரண்டாம் நிலை – மலைகள், பீடபூமிகள், சமவெளிகள்
3. மூன்றாம் நிலை – பள்ளத்தாக்குகள், கடற்கரைகள், மணல் குன்றுகள்
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 1, 3 சரி

2. கூற்று 1: உலகின் மிகப் பெரிய கண்டம் ஆசியா ஆகும்.
கூற்று 2: ஆஸ்திரேலியா மிகச் சிறிய கண்டமாகும்.
A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

3. போர்ட்டோ ரிக்கோ அகழியில் காணப்படும் மில்வாக்கி அகழி ____________ பெருங்கடலின் ஆழமான பகுதியாகும்.
A) ஆர்டிக் பெருங்கடல்
B) இந்திய பெருங்கடல்
C) அட்லாண்டிக் பெருங்கடல்
D) தென் பெருங்கடல்

4. கூற்று 1: உலகின் மிகப் பெரிய பெருங்கடல் பசிபிக் பெருங்கடல்.
கூற்று 2: மிகச் சிறிய பெருங்கடல் தென் பெருங்கடல்.
A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி
B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

5. நிலச்சந்தி என்பது ___________.
1. இரண்டு பெரிய நிலப்பரப்புகளை இணைக்கக் கூடிய மிகக் குறுகிய நிலப்பகுதி
2. இரண்டு பெரிய நிலப்பரப்புகளை பிரிக்கக் கூடிய மிகக் குறுகிய நீர் பகுதி
3. இரண்டு பெரிய நீர்ப்பரப்புகளை பிரிக்கக் கூடிய மிகக் குறுகிய நிலப்பகுதி
A) 1, 2
B) 1 மட்டும்
C) 2 , 3
D) 1, 3

6. சுற்றுப்புற நிலப்பகுதியை விட ________ மீட்டருக்கு மேல் உயர்ந்து காணப்படும் நிலத்தோற்றம் மலைகள் ஆகும்.
A) 250
B) 400
C) 500
D) 600

7. தவறான இணையைத் தேர்ந்தெடு (மலைத்தொடர் – அமைந்துள்ள நாடு)
1. இமயமலைத் தொடர் – ஆசியா
2. ராக்கி – தென்அமெரிக்கா
3. ஆண்டிஸ் – வட அமெரிக்கா
A) 2 மட்டும் தவறு
B) 3 மட்டும் தவறு
C) 1, 3 தவறு
D) 2, 3 தவறு

8. உலகின் நீளமான மலைத்தொடரான ஆண்டிஸ் மலைத் தொடரின் நீளம்
A) 5000 கி.மீ
B) 5500 கி.மீ
C) 6800 கி.மீ
D) 7000 கி.மீ

9. உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட்டின் உயரம்
A) 8488 மீட்டர்
B) 8838 மீட்டர்
C) 8848 மீட்டர்
D) 8588 மீட்டர்

10. கூற்று 1: பாஞ்சியா, இது பெருங்கண்டம் எனப்படும்.

கூற்று 2: பாஞ்சியாவை சுற்றியுள்ள நீர் பரப்பு பான்தலாசா ஆகும்.

A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

11. பான்தலாசா நிலப்பரப்பு நகரத் தொடங்கியதற்கான காரணம்

A) புவியினுள் உள்ள அழுத்தம்

B) காற்றின் ஈரப்பதம்

C) புவியினுள் உள்ள வெப்பம்

D) வாயுக்களின் இடமாற்றம்

12. சர்வதேச மலைகள் தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது?

A) அக்டோபர் 5

B) நவம்பர் 11

C) டிசம்பர் 07

D) டிசம்பர் 11

13. சமமான மேற்பரப்பைக் கொண்ட உயர்த்தப்பட்ட நிலப்பரப்பு __________ எனப்படும்.

A) சமவெளி

B) பீடபூமி

C) பள்ளத்தாக்கு

D) குன்று

14. தவறானக் கூற்றைத் தேர்ந்தெடு.

A. பீடபூமிகள் நூறு மீட்டரிலிருந்து பல்லாயிரம் மீட்டர் வரை உயர்ந்து காணப்படுகின்றன.

B. உலகிலேயே உயர்ந்த பீடபூமி திபெத் பீடபூமியாகும்.

C. சோட்டா நாகபுரி பீடபூமி உலகத்தின் கூரை என்று அழைக்கப்படுகிறது

D. பீடபூமிகளில் கனிமங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

15. கூற்று: சோட்டா நாகபுரி பீடபூமியின் முக்கியத் தொழில் சுரங்கத் தொழிலாகும்.

காரணம்: இப்பீடபூமி கனிமங்கள் நிறைந்த பகுதியாகும்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று காரணம் இரண்டும் தவறு

C) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.

D) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

16. தென்னிந்தியாவில் உள்ள தக்காணப் பீடபூமி ___________ பாறைகளால் ஆனது.

A) சிலிகா

B) சுண்ணாம்பு

C) கிரானைட்

D) எரிமலை

17. கடல் மட்டத்திலிருந்து _________ மீட்டருக்கும் குறைவான உயரம் கொண்ட நிலத்தோற்றம் சமவெளி எனப்படும்.

A) 100

B) 200

C) 300

D) 400

18. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) சமவெளிகள் ஆறுகள், அதன் துணை ஆறுகள் மற்றும் கிளை ஆறுகளால் உருவாக்கப்படுகின்றன.

B) சமவெளியில் வளமான மண்ணும் நீர்ப்பாசனமும் இருப்பதால் வேளாண்மை தழைத்தோங்குகிறது.

C) சமவெளிகள், உலகில் குறைந்த மக்கள் தொகை கொண்ட பிரதேசங்களாக விளங்குகின்றன.

D) வட இந்தியாவிலுள்ள கங்கைச் சமவெளி உலகின் பெரிய சமவெளிகளில் ஒன்றாகும்.

19. தமிழ்நாட்டிலுள்ள முக்கிய சமவெளிகள் எந்த ஆறுகளால் உருவாக்கப்பட்டவை?

A) காவேரி, கொள்ளிடம்

B) கங்கை, வைகை

C) காவேரி, தாமிரபரணி

D) காவேரி, வைகை

20. யாங்சி சமவெளி எந்த பீடபூமியில் அமைந்துள்ளது?

A) தக்காண பீடபூமி

B) மாளவ பீடபூமி

C) திபெத் பீடபூமி

D) ஐரோப்பிய பீடபூமி

21. ___________ பண்டைய நாகரிகங்களின் தொட்டிலாக விளங்கின.

A) பீடபூமிகள்

B) ஆற்றுச் சமவெளிகள்

C) கடற்கரைச் சமவெளிகள்

D) பள்ளத்தாக்குகள்

22. கூற்று 1: ஆறுகள், பனியாறுகள், காற்று மற்றும் கடல் அலைகள் போன்றவற்றின் முக்கியச் செயல்கள் அசத்தல் மற்றும் படிய வைத்தல் ஆகும்.

கூற்று 2: இச்செயல்களால் மலைகள், பீடபூமிகள் மற்றும் சமவெளிகளில் தோற்றுவிக்கப்படும் நிலத்தோற்றங்கள் மூன்றாம் நிலை நிலத்தோற்றங்கள் ஆகும்.

A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

23. கூற்று: விண்வெளியில் இருந்து பார்க்கும் போது புவி நீல நிறமாக காட்சியளிக்கும்.

காரணம்: புவியின் மூன்றில் இரண்டு பங்கு நீர்ப்பரப்பாக உள்ளதே இதற்கு காரணம்.

A) கூற்று சரி, காரணம் தவறு

B) கூற்று காரணம் இரண்டும் தவறு

C) கூற்று காரணம் இரண்டும் சரி ஆனால் சரியான விளக்கமல்ல.

D) கூற்று காரணம் இரண்டும் சரி மற்றும் சரியான விளக்கம்

24. முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிலத்தால் சூழப்பட்ட பெரிய நீர்ப்பரப்பு __________ எனப்படுகிறது.

A) பெருங்கடல்

B) கடல்

C) வளைகுடா

D) தீபகற்பம்

25. புவியின் மொத்தப் பரப்பளவில் மூன்றில் ஒரு பகுதியைக் கொண்டுள்ள கடல்

A) அட்லாண்டிக் பெருங்கடல்

B) இந்திய பெருங்கடல்

C) பசிபிக் பெருங்கடல்

D) தென்பெருங்கடல்

26. பசிபிக் பெருங்கடலின் பரப்பளவு _____________ மில்லியன் சதுர கிலோமீட்டர் ஆகும்.

A) 148.62

B) 158.72

C) 172.68

D) 168.72

27. பசிபிக் பெருங்கடலின் முக்கோண வடிவத்தின் மேற்குப் பகுதி பசிபிக் பெருங்கடலையும் ஆர்டிக் பெருங்கடலையும் இணைக்கும் ________ நீர்ச்சந்தியில் காணப்படுகிறது.

A) ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி

B) பெரிங் நீர்ச்சந்தி

C) கரீபியன் நீர்ச்சந்தி

D) தாஸ்மானியா நீர்ச்சந்தி

28. கடலின் ஆழத்தை _________ என்ற குறியீட்டால் குறிப்பிட வேண்டும்.

A) கி.மீ

B) மீ⁻

C) டெசி.மீ⁻

D) டெகா.மீ⁻

29. கீழ்க்கண்டவற்றுள் பசிபிக் பெருங்கடலின் எல்லையோரத்தில் அமைந்துள்ள கடல்கள் எவை?

1. பேரிங் கடல் 2. சீனக் கடல் 3. ஜப்பான் கடல் 4. தாஸ்மானியா கடல் 5. பிலிப்பைன்ஸ் கடல்

A) 1, 2, 4

B) 2, 4, 5

C) 1, 3, 4, 5

D) அனைத்தும்

30. பசிபிக் பெருங்கடலைச் சுற்றி எரிமலைகள் தொடர்ச்சியாக அமைந்துள்ளதால் பசிபிக் ___________ என அழைக்கப்படுகிறது.

A) எரிமலை வளையம்

B) லாவா வளையம்

C) நெருப்பு வளையம்

D) கடல் வளையம்

31. கூற்று 1: ஸ்பெயின் நாட்டின் மாலுமி பெர்டினாண்டு மெகல்லன் பசிபிக் என பெயரிட்டார்.

கூற்று 2: பசிபிக் என்பதன் பொருள் நெருப்பு என்பதாகும்.

A) கூற்று 1, கூற்று 2 இரண்டும் சரி

B) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

C) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

D) கூற்று 1, கூற்று 2 இரண்டும் தவறு

32. அட்லாண்டிக் பெருங்கடல் புவியின் மொத்த பரப்பளவில் எத்தனை பங்கைக் கொண்டுள்ளது?

A) 1/3

B) 2/5

C) 1/6

D) 2/6

33. அட்லாண்டிக் பெருங்கடல் ________ என்ற ஆங்கில எழுத்து வடிவத்தை போன்று உள்ளது.

A) Z

B) C

C) G

D) S

34. ___________ நீர்ச் சந்தி அட்லாண்டிக் பெருங்கடலையும், மத்திய தரைக்கடலையும் இணைக்கிறது.

A) ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி

B) பெரிங் நீர்ச்சந்தி

C) மலாக்கா நீர்ச்சந்தி

D) பாக் நீர்ச்சந்தி

35. கீழ்க்கண்டவற்றுள் அட்லாண்டிக் பெருங்கடலின் எல்லையோரக் கடல்கள் எவை?

1. கரீபியன் கடல் 2. மெக்சிகோ வளைகுடா 3. வடகடல்

4. கினியா வளைகுடா 5. மத்திய தரைக் கடல்

A) 1, 2, 5

B) 1, 3, 5

C) 1, 3, 4, 5

D) அனைத்தும்

36. இந்திய பெருங்கடலின் பரப்பு சுமார் _________ மில்லியன் சதுர கி.மீ. ஆகும்.

A) 50.75

B) 70.52

C) 70.65

D) 70.56

37. ___________ நீர்ச்சந்தி இந்தியப் பெருங்கடலையும் பசுபிக் பெருங்கடலையும் இணைக்கிறது.

A) ஜிப்ரால்டர் நீர்ச்சந்தி

B) பெரிங் நீர்ச்சந்தி

C) மலாக்கா நீர்ச்சந்தி

D) பாக் நீர்ச்சந்தி

38. இந்திய பெருங்கடலின் எல்லையோரக் கடல்கள் எவை?

1. வங்காள விரிகுடா 2. அரபிக் கடல்

3. பாரசீக வளைகுடா 4. டேவிஸ் கடல்

5. செங்கடல்

A) 1, 2, 5

B) 1, 2

C) 1, 2, 4

D) 1, 2, 3, 5

39. இந்தியப் பெருங்கடலின் ஆழமான பகுதியான ஜாவா அகழியின் ஆழம்

A) 6,625 மீ

B) 5,565 மீ

C) 7,725 மீ

D) 7,625 மீ

40. தவறான கூற்றைத் தேர்ந்தெடு.

A) 6° கால்வாய் – இந்திரா முனையையும் இந்தோனேசியாவையும் பிரிக்கிறது.

B) 8° கால்வாய் மாலத்தீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது.

C) 9° கால்வாய் லட்சதீவையும் மினிக்காய் தீவையும் பிரிக்கிறது.

D) 11 ° கால்வாய் அந்தமான் தீவையும் நிக்கோபர் தீவையும் பிரிக்கிறது.

41. தென் பெருங்கடல் _________ தெற்கு அட்சத்தால் சூழப்பட்டுள்ளது.

A) 40°

B) 50°

C) 60°

D) 65°

42. தென் பெருங்கடலின் பரப்பளவு _________ மில்லியன் சதுர கி.மீ ஆகும்.

A) 28.16

B) 29. 16

C) 21.96

D) 22.96

43. கீழ்க்கண்டவற்றுள் தென் பெருங்கடலின் எல்லையோரக் கடல்கள் எவை?

1. ராஸ் கடல் 2. வெடல் கடல் 3. நார்வே கடல்

4. டேவிஸ் கடல்

A) 1, 2, 3

B) 2, 3, 4
C) 2, 3
D) 1, 2, 4

44. தென்பெருங்கடலின் ஆழமான பகுதியான தென்சான்ட்விச் அகழியின் ஆழம்
A) 5,235 மீ⁻
B) 4,325 மீ⁻
C) 6,523 மீ⁻
D) 7,235 மீ⁻

45. ஆர்டிக் பெருங்கடலின் பரப்பளவு சுமார் __________மில்லியன் சதுர கி.மீ.
A) 14.56
B) 15.16
C) 14.62
D) 15.56

46. கீழ்க்கண்டவற்றுள் ஆர்க்டிக் பெருங்கடலின் எல்லையோரக் கடல்கள் எவை?
1. நார்வே கடல்2. கிரீன்லாந்து கடல்
3. கிழக்கு சைபீரியக் கடல் 4.பேரண்ட் கடல்
A) 1, 3, 4
B) 1, 3, 4
C) 2, 4
D) அனைத்தும்

47. ஆர்க்டிக் பெருங்கடலின் ஆழமான பகுதியான 'யுரேசின் தாழ்நிலம்' ___________ மீட்டர் ஆழமுடையது.
A) 4,549
B) 6,549
C) 5,449
D) 6,594

48. பொருத்துக. (பெருங்கடல்களின் பரப்பளவு)
1. பசிபிக் பெருங்கடல் – i) 23%
2. அட்லாண்டிக் பெருங்கடல் – ii) 47%
3. இந்திய பெருங்கடல் – iii) 20%
4. ஆர்க்டிக் பெருங்கடல் – iv) 4%
5. தென் பெருங்கடல் – v) 6%
A) i iii ii iv v
B) iii ii i iv v
C) ii i iii iv v
D) iv iii i ii v

49. பரப்பளவில் மூன்றாவது பெரிய கண்டமாகவும், உலக மக்கள் தொகையில் நான்காவது இடத்தையும் பெற்றுள்ள கண்டம்
A) ஐரோப்பா
B) வட அமெரிக்கா
C) தென் அமெரிக்கா
D) ஆப்ரிக்கா

50. உலக மக்கள் தொகையில் ஐந்தாவது இடத்தில் உள்ள கண்டம்
A) ஐரோப்பா
B) வட அமெரிக்கா
C) தென் அமெரிக்கா
D) ஆப்ரிக்கா

51. உலக மக்கள் தொகையிலும், பரப்பளவிலும் இரண்டாவது இடத்திலுள்ள கண்டம்
A) ஐரோப்பா
B) வட அமெரிக்கா
C) ஆசியா
D) ஆப்ரிக்கா

52. பரப்பளவில் ஆறாவது பெரிய கண்டம் எது?
A) ஐரோப்பா
B) வட அமெரிக்கா
C) தென் அமெரிக்கா
D) அண்டார்டிக்கா

53. அண்டார்டிக்கா குறித்த கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.
1. பரப்பளவில ஆறாவது பெரிய கண்டம்.
2. நிரந்தர குடியிருப்புகள் கிடையாது
3. சுமார் 4000 ஆராய்ச்சியாளர்கள் இங்கு தங்கியுள்ளனர்.
A) அனைத்தும் சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) 2 மட்டும் சரி

54. உலக மக்கள் தொகையில் ஆறாவது இடத்திலுள்ள கண்டம்
A) ஆஸ்திரேலியா
B) வட அமெரிக்கா
C) ஆர்க்டிக்
D) அண்டார்டிக்கா

55. பொருத்துக.

winmeen.com

1. தென்சான்ட்விச் அகழி – i) அட்லாண்டிக் பெருங்கடல்
2. மில்வாக்கி அகழி – ii) தென் பெருங்கடல்
3. மரியானா அகழி – iii) இந்திய பெருங்கடல்
4. யுரேஷியன் படுகை – iv) பசிபிக் பெருங்கடல்
5. ஜாவா அகழி – v) ஆர்க்டிக் பெருங்கடல்

A) i iii ii v iv

B) ii iv v iii i

C) iv ii i v ii

D) ii i iv v iii

winmeen.com